IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.S. No.254/2022

சாட்சி : PW1

பெயர் : முத்துசாமி தேதி: 12-03-2025

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக பிரதிவாதி என் மீது அசல் வழக்கு எண். 180/2022 கிரய உடன்படிக்கைபடி ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்துவிட்டார் என்றால் ஆமாம். இந்த வழக்கில் அசல் வழக்கு எண். 180/2022 சம்மந்தமாக நான் எந்த விவரங்களையும் குறிப்பிடவில்லை என்றால் ஆமாம். இந்த வழக்கில் கிரய உடன்படிக்கை செல்லாது என்ற பரிகாரம் சம்மந்தமாக அந்த கிரய உடன்படிக்கை சான்று நகல் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். தாவா சொத்துக்கள் வா.த.சா.ஆ- A2 மற்றும் வா.த.சா.ஆ- A3 மற்றும் 28.11.2005 தேதியிட்ட கிரய ஆவணங்கள்படி பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். 28.11.2005 கிரய ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். 28.11.2005 என் பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணத்தின் சான்று நகல் **பி.வா.த.சா.ஆ-B1** ஆகும். பி.வா.த.சா.ஆ-B1ல் கண்ட சொத்தின் ஒரு பகுதி 2170 சதுரடியை ஒரு மாணிக்கம் என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம். அந்த கிரயத்தின் சான்று நகல் என்னிடம் காட்டப்படுவதுதான். அது **பி.வா.த.சா.ஆ-B2** ஆகும். மாணிக்கத்திற்கு விற்பனை செய்தது போக மீதி 680 சதுரடி தான் அந்த சொத்தில் தற்போது எனக்கு பாத்தியப்பட்டது என்றால் ஆமாம்

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டது.

ஒம்/- A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.